DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, PARAMATHY**

**CC.No. 150/2022**

**PW– 19**

| | | | |
|---|---|---|---|
| Name: | சித்ரா (LW–32) | Calling: | காவல் உதவி ஆய்வாளர் |
| Husband's Name: | செல்லப்பன் | Age: | 39 |
| Village: | பரமத்தி வேலூர் | Taluk: | பரமத்தி வேலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969 ) on the date 07.08.2025 by Thiru. R.Silambarasan, Magistrate Clerk of this court.

**(Accused absent, petition u/s 317 Cr.P.C is filed and allowed.)**

**<u>முதல் விசாரணை=</u>**

1. நான் தற்போது Q பிரிவு குற்ற புலனாய்வு துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.04.2020–ம் தேதி வேலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது நாமக்கல் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் சுற்ற அறிக்கை குறிப்பாணை எண்.6545/E1/நா.ம./2020/ நாள் 11.04.2020 உத்தரவு படி இந்த முதல் தகவல் அறிக்கைக்கு வரிசை எண்.NKL/E1/415 கொடுக்கப்பட்டுள்ளது. 23.06.2020 ம் தேதி உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது வேலூர்அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நாமக்கல் மாவட்டம், புங்கம்பாளையம் காலணியை சேர்ந்த ரஞ்சித்குமார் மனைவி ரேவதி என்பவரை 12 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின் நிலைய குற்ற எண். 681/2020 இதச 279, 337, r/w 188, 269, –ன் படி வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு**

**செய்த முதல் தகவல்அறிக்கை அரசு தரப்பு சான்றாவணம் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

01. மருத்துவமனையில் இருந்து தகவல் கொடுக்கப்ட்டதன் அடிப்படையில் தான் நான் சென்று வாக்குமூலம் பதிவு செய்தேன் எனறால் சரிதான். காயம் பட்ட நபரை விசாரித்து நான் வாக்குமூலம் பெற்றேனா என்றால் பெற்றேன். மருத்துவமனையில் AR பதிவு செய்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த AR பதிவில் வண்டி UPSET ஆனதால் தான் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் அவ்வாறு தான் குறிப்பிட்டுள்ளேன். AR பதிவில் புங்கம்பாளையம் காலணி அருகே தான் விபத்து நடந்தாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

02. முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு 2 நாட்கள் காலதமதமாக தான் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் அன்றைய தினமே அனுப்பிவிட்டேன். முதல் தகவல் அறிக்கை 23.06.2020–ம் தேதியில் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு 25.06.2020–ல் தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும், போர்மன்னன் மாட்டுக்கொட்டை அருகே தான் விபத்து நடந்தாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், அவ்வாறு தான் சொன்னார்கள்.

03. புங்கம்பாளையம் காலணி என்பதும் போர்மன்னன் மாட்டுக்கொட்டகை என்பதும் வெவ்வேறு இடம் என்றால் சரியல்ல, பக்கத்து , பக்கத்து இடம் தான். இந்த வழக்கில் சொன்ன நேரத்தில், சொன்ன சமயத்தில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் அதனால் தான் இரண்டு நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றால் சரியல்ல. வழக்கு புகாரில் சொல்லியுள்ளவாறு விபத்து அவ்வாறு நடக்கவில்லை என்றால் சரியல்ல.

Sd/K.S.Suhesh,
Judicial Magistrate,
Paramathy.